## தலைப்பு 244 - வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கைத் திணைக்களம்

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழி அபிப்பிராயம்

வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கைத் திணைக்களத்தின்-தலைப்பு 244 இன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கைத் திணைக்களத்தின் சமர்ப்பிக்கப்படும் இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கைத் திணைக்களத்தின நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 யூன் 02 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 ஆகஸ்ட் 05 ஆம் திகதி வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுஅதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்களில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கைத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் ஆகியன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கைத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் திணைக்களம் தனது வருமானங்கள்,

செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கைத் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

நிதிக்கூற்றுக்கள், ஒட்டுமொத்தமாக மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தொடர்பில் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது, மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- திணைக்களத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் நான் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றது.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரியதாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

**2. நிதி மீளாய்வு**

**2.1 கட்டு நிதி முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட கட்டு நிதி தேவைப்பாட்டு பதிவேட்டின் பிரகாரம், 2021 ஆம் ஆண்டின் திசெம்பர் மாதத்திற்காக ரூபா 5,965,000 தொகையான கட்டுநிதி மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதே மாதத்தில் திணைக்களத்தினால் திட்டமிடப்பட்ட கட்டுநிதி மதிப்பீட்டினை விஞ்சியதாக ரூபா 10,848,000 தொகையான கட்டுநிதி கோரப்பட்டிருந்தது. | 2021.10.01 ஆம் திகதியிடப்பட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 02/2021(v) இன் பிரகாரம், சேவைக்கு குறைந்தபட்ச நாட்களில் உத்தியோகத்தர்களை அழைத்தமை காரணமாக 2021 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் கொடுப்பனவுக்காக அனுப்பப்பட்ட கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டது. எனவே, 2021 ஆம் ஆண்டின் கடைசி காலாண்டில் நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களில் மிகையான உறுதிச்சீட்டுக்களை கொடுப்பனவிற்காக அனுப்பியதன் காரணமாக கட்டுநிதி வேறுபாடு காட்டப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இது எமது திணைக்களத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வருடாந்த ஏற்பாடுகளின் வரம்பினுள் நிகழ்ந்துள்ளது. | திணைக்களத்தின் பணிகளினை நிறைவு செய்வதற்காக திறைசேரியிடம் இருந்து தேவையான கட்டுநிதியினை கோருகின்ற போது துல்லியமான மதிப்பீடொன்று செய்யப்படல் வேண்டும். |

**2.2 செலவின முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) பயன்படுத்தப்படாத ஏற்பாடுகள்** | | |
| 02 விடயங்களுக்காக வழங்கப்பட்ட மொத்த நிகர ஒதுக்கீட்டு தொகையான ரூபா 2,450,000 தொகை மீளாய்வாண்டில் எவ்வித பயன்பாடும் செய்யப்படாமை காரணமாக முற்றிலுமாக சேமிக்கப்பட்டது. | அமைச்சரவை அமைச்சர்களின் 2021.08.30 ஆம் திகதியிடப்பட்ட 21/1596/304/134 ஆம் இலக்க தீர்மானத்தின் பிரகாரம், திணைக்களத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளை சேமிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. கொவிட்-19 தொற்று நோய் நிலைமை காரணமாக வெளிநாட்டு பயணங்களுக்கு உத்தியோகத்தர்கள் பங்கேற்காமை காரணமாக விடயங்களுக்கான மொத்த ஏற்பாடுகளும் சேமிக்கப்பட்டன. | நிதி ஒழுங்கு விதிகள் 50 இன் பிரகாரம், வருடாந்த செலவின மதிப்பீடுகள் துல்லியமாகவும் உண்மையாகவும் தயாரிக்கப்படல் வேண்டும். |
| **(ஆ) மேலதிக ஏற்பாடுகளை செய்தல்** | | |
| மீண்டெழும் செலவு விடயங்கள் 09 இற்கும் மூலதன செலவு விடயங்கள் 02 இற்கும் கூட்டு மொத்தமாக ரூபா 56,402,500 மேலதிகமான ஏற்பாடொன்று வழங்கப்பட்டிருந்தது. அதே ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்ட பின்னர் கூட்டு மொத்தமாக ரூபா 13,564,321 தொகையான ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு செலவு விடயங்களின் ஏற்பாடுகளிலும் 14 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையிலான வீச்சில் அதே சேமிப்பு காணப்பட்டிருந்தது. | வருமானம் பேணல் கட்டளைச்சட்டம் திட்டமிட்டதன் பிரகாரம், அச்சிடப்படவில்லை. 2021.08.30 ஆம் திகதியிடப்பட்ட அமப/21/1596/304/134 ஆம் இலக்க அமைச்சரவை அமைச்சர்களின் தீர்மானத்தின் பிரகாரம், ஏற்பாடுகளை சேமிக்கப்பட்டமை, கொவிட்-19 தொற்று காரணமாக உத்தியோகபூர்வ பயணங்கள் மட்டுப்படுத்தப்பட்டமை, இயந்திரங்களின் குறைந்தபட்சம் பயன்படுத்தப்பட்டமை காரணமாக உத்தியோகர்கள் குறைந்தபட்ச அளவில் ஈடுபடுத்தப்பட்டமை, சாரதிகள் சேவையில் காணப்படும் வெற்றிடங்கள் எதிர்பார்த்ததன் பிரகாரம் நிரப்பப்பட்டிருக்காமை, பணிப்பாளர் பதவியில் உள்ள வெற்றிடங்கள் பூரணப்படுத்தப்படாமை காரணமாக போக்குவரத்து படிகளின் சேமிப்பு, செயல்முறை பயிற்சி நிகழ்ச்சி நிரல்கள் நடத்தப்படாமை மற்றும் அதன் கடன்களை பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்பட்டமை முதலிய காரணங்கள் காரணமாக ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன. | நிதி ஒழுங்கு விதிகள் 50 இன் பிரகாரம், வருடாந்த செலவு மதிப்பீடுகள் துல்லியமாகவும் யதார்த்தமாகவும் தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| **(இ)** | **பௌதீக சொத்துக்களை உடைமையாக்கல்**<br>2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளால் உருவாக்கப்பட்ட காசுப்பாய்ச்சல்களில் உள்ள பணச் செலவுகளாக பௌதீக சொத்துக்கள் நிர்மாணிப்பு செய்தல் அல்லது கொள்வனவு செய்தல் மற்றும் உடைமையாக்கப்பட்ட முதலீடுகள் என ரூபா 2,413,494 தொகையான பெறுமதி காட்டப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் அதே தொகை ரூபா 2,403,494 என மதிப்பிடப்பட்டமை காரணமாக முதலீட்டு நடவடிக்கைகளால் உருவாக்கப்பட்ட தேறிய காசுப்பாய்ச்சல் ரூபா 10,000 தொகையினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | செலவின விடயம் 2401 இன் கீழ் திறன் மேம்பாட்டிற்கான பாதீட்டு ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம், இது மூலதன செலவொன்றாக காணப்படுவதுடன் இது மீண்டெழும் செலவு வகையில் இல்லை. அதன் பிரகாரம், மனித வளங்கள் முதலீட்டில் ஏற்பட்ட செலவுகள் கணக்கிற்கு செலவு விடயம் 2401 இன் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதுடன் முதலீட்டு நடவடிக்கைகளின் மீது ஏற்பட்ட செலவொன்றாக காட்டப்பட்டுள்ளது. | பௌதீக சொத்துக்களின் உடமையாக்கலாக நிதி செயலாற்றுகை கூற்றிலும் காசுப்பாய்ச்சல் கூற்றிலும் காட்டப்பட்ட செலவு நிதி நிலைமை கூற்றில் நிதி மற்றும் நிதியல்லா சொத்துக்களின் கீழ் கணக்கிற்கு முன் கொண்டுவரப்படல் வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரணமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரணமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமை | | |
| (அ) | நிதி ஒழுங்கு விதி 1646 | திணைக்களத்திற்கு சொந்தமான தொகுதியிலுள்ள (Pool) வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் கணக்காய்விற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. | உங்களுடைய அவதானிப்புகடகளுடன் உடன்படுகிறோம். 2022 ஆம் ஆண்டு முதல் நாளாந்த ஓட்ட அட்டவணைகளுடன் மாதாந்த பொழிப்பின் அசல் பிரதியினையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம், நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | நிதி ஒழுங்கு விதி 104 (1) | 2021 செப்தெம்பர் 03 அன்று கெப் (cab) வாகனத்திற்கு இடம்பெற்ற விபத்து தொடர்பில் நிதி ஒழுங்கு விதி 104 இன் பிரகாரம், நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி ஒழுங்கு விதி 104 (3) பூர்வாங்க அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. 2021.12.03 இற்கு முன்னர் இறுதி அறிக்கையினை பூர்த்தி செய்ய முடிந்திருக்கவில்லை. நாட்டில் நிலவிய ஆபத்தான நிலைமை மற்றும் விடய இலிகிதர்களின் சுகவீனம் காரணமாக அதே பரிசோதனை அறிக்கை தாமதமாகியிருந்த போதிலும், இறுதி அறிக்கையினை தயாரித்து செயலாளருக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம், நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | நிதிப் பிரமாணங்கள் 110, 1645(அ) மற்றும் 1647 (ஈ) | மீளாய்வாண்டில் வாகன குறிப்பு புத்தகங்கள், சேதங்கள் மற்றும் நட்டப் பதிவேடு மற்றும் வாகனப்பதிவேடு என்பன நாளதுவரையாக்கல் செய்யப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை. | நிருவாக உத்தியோகத்தரொருவர் காணப்படவில்லை மற்றும் விடய இலிகிதர் கொரோனாவால் பாதிக்கப்பட்டிருந்தார். சேதங்கள் மற்றும் நட்டங்கள் பதிவேட்டினை தயாரிக்கும் உத்தியோகத்தர் டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்பட்டிருந்தார். சம்பவ குறிப்பு பதிவுகளை சரிபார்த்து சேதங்கள் மற்றும் நட்டங்கள் பதிவேட்டில் குறிப்புக்களை பேணுவதற்கு முடியவில்லை. சரிசெய்வதன் மூலம் தொடர்புடைய நடவடிக்கைகள் தற்போது முறையாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று அறிய தருகின்றேன். | நிதி ஒழுங்கு விதிகளின் பிரகாரம், புத்தகங்களும், பதிவேடுகளும் முறையாக பேணப்படல் வேண்டும். |
| (ஈ) | பொதுக் கணக்குகள் திணைக்களத்தின் 2021 நவம்பர் 26 ஆம் திகதியிடப்பட்ட வழிகாட்டல் இலக்கம் 2021/03 | நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிடலுக்கான அடிப்படை வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | உங்களின் அபிப்பிராயத்தின் பிரகாரம், 2021 ஆம் ஆண்டில் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படவேண்டிய அறிக்கையிடலுக்கான அடிப்படை வெளிப்படுத்தப்பட்டிருக்கவி | பொதுக் கணக்குகள் திணைக்களத்தின் வழிகாட்டல்களின் பிரகாரம், நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ல்லை மற்றும் 2022 ஆம் ஆண்டில் இருந்து தேவையான திருத்தங்களை செய்வதற்கு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது. | |
| (உ) | பொதுக் கணக்குகள் திணைக்களத்தின் 2021 நவம்பர் 2 ஆம் திகதியிடப்பட்ட வழிகாட்டல் இலக்கம் 2021/03 இன் 7.6 ஆம் பந்தி | காசு மற்றும் குறுக்கு பதிவுகள் ஆகிய இரண்டு பிரிவுகளையும் கருத்திற் கொண்டு நேரடி முறையினை அமுல்படுத்தி நிதிக்கூற்று (ஏசிஏ-சீ) தயாரிக்கப்படல் வேண்டும். திணைக்களத்தின் காசுப்பாய்ச்சல் கூற்றினை தயாரிக்கும் போது காசாக பெற்றுக் கொள்ளப்பட்ட முற்பணங்கள் மற்றும் காசாக கொடுப்பனவு செய்யப்பட்ட முற்பணங்கள் மாத்திரம் கருத்தில் கொள்ளப்பட்டிருந்தது. அதற்கிணங்க, ஒன்றித்த விரிவான பரீட்சை மீதியின் பிரகாரம், முற்பணங்களாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தவை ரூபா 4,745,908 தொகையாகவும், முற்பணங்களாக பெற்றுக் கொள்ளப்பட்டவை ரூபா 4,474,982 தொகையாகவும் காணப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், அவை காசுப்பாய்ச்சல் கூற்றில் முறையே ரூபா 3,025,214 மற்றும் ரூபா 2,754,288 தொகையாக காணப்பட்டிருந்தன. எனவே, கிடைக்கப்பெற்ற மற்றும் கொடுப்பனவு செய்யப்பட்ட முற்பணங்களின் பெறுமதி ரூபா 1,720,694 தொகையால் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | பொதுக்கணக்குகள் திணைக்களத்தின் வழிகாட்டியின் மூலம் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம், தேவையான திருத்தங்களை உள்ளடக்குவதன் மூலம் காசுப்பாய்ச்சல் கூற்றினை தயாரித்து சமர்ப்பிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | பொதுக் கணக்குகள் திணைக்களத்தின் வழிகாட்டல்களின் பிரகாரம், நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஊ) | 2018 சனவரி 24 ஆம் திகதியிடப்பட்ட 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 6.1 ஆம் பந்தி | 2021 ஆம் ஆண்டில் பணியாளர் பயிற்சிக்காக ரூபா 700,000 தொகையான ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், திணைக்களத்தின் 48 ஊழியர்களில் ஒரு உத்தியோகத்தருக்கு | 2021.08.30 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகள் சேமிக்கப்படல் வேண்டும் மற்றும் கொவிட்- | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம், நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மாத்திரம் ஆண்டின் போது பயிற்சிக்கான வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது. | 19 தொற்று நிலைமை காரணமாக பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்த முடியவில்லை. | |
| (எ) | 2004 ஒக்தோபர் 11 ஆம் திகதியிடப்பட்ட 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 1.1.7 ஆம் பந்தி | திணைக்களத்திற்கு வெளியே இடமாற்றம் செய்யப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரினதும் உள்ளே இடமாற்றம் செய்யப்பட்ட 03 உத்தியோகத்தர்களினதும் கடன் மீதியான கூட்டுமொத்த தொகை ரூபா 797,731 தொடர்பில் சுற்றறிக்கையின் பிரகாரம், நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கொவிட்-19 தொற்று நிலைமை காரணமாக அந்த உத்தியோகத்தர்களை தொடர்பு கொள்வது சிக்கலாக இருந்தது மற்றும் வழக்கமான கடமைகளில் ஏற்பட்ட இடையூறுகள் காரணமாக கடன்களினை தீர்ப்பனவு செய்வதற்கு அவ்வளவு கால அவகாசம் எடுத்தது. எனவே, உங்களின் அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். அதன் விளைவாக 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 1.1.6 ஆம் பிரிவின் பிரகாரம், நடவடிக்கையினை எடுக்க முடியாதிருந்தது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம், நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்த்த வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஏனைய வர்த்தக துறைகளையும் உள்ளடக்கும் வகையில் முன்மொழியப்பட்ட பொருட்களின் விற்பனை, சேவைகளின் விற்பனை முதலீடு மற்றும் சுங்க ஒற்றுமை போன்ற பின்வரும் 4 பல்துறை வர்த்தக ஒப்பந்தங்கள் 2015 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கூட கலந்துரையாடல் மட்டத்திலேயே காணப்பட்டன. மீளாய்வாண்டின் இறுதி | வங்காள விரிகுடா பல்துறை தொழில்நுட்ப பொருளாதார கூட்டுறவிற்கான முன்னெடுப்பு மற்றும் ஆராய்ச்சி திட்டங்களை பயன்படுத்துவதற்கான பலதரப்பு ஒப்பந்தம் தொடர்பான BIMSTEC அங்கத்துவ நாடுகளின் தன்னார்வ பங்களிப்புடன் அபிவிருத்தி நிதியத்தினை (BDF) ஸ்தாபிப்பதற்கான இயலுமையினை ஆய்வு செய்வதற்காக BIMSTEC நிதியத்துடன் தொடர்புடைய இந்த திணைக்களத்தின் வரைபு கருத்து தாள் மீது அவதானிப்புக்கள் / கருத்துரைகள் தற்போது வெளிநாட்டு அலுவல்கள் | தாமதமின்றி உடன்படிக்கைகளுக்குள் நுழைவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

வரையிலும் கூட அந்த உடன்படிக்கைகளை கைச்சாத்திடுவதன் மூலம் நிதி மற்றும் பௌதீக செயல் முன்னேற்றமொன்றை அடைந்தது கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

i. வங்காள விரிகுடா பல்துறை தொழில் நுட்ப பொருளாதார கூட்டுறவிற்கான முன்னெடுப்பு

ii. பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கை (ETCA)

iii. உத்தேச சீனா - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (CSFTA)

iv. இலங்கை – தாய்லாந்து சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (SLTFTA)

அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தியா இலங்கை பொருளாதார மற்றும் தொழிநுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கையின் கீழான

பொதுவான ஏற்பாடுகள் மற்றும் வியாபாரம் வர்த்தகம் பற்றிய பதினொராவது கலந்துரையாடல் 2018 ஒக்தோபர் அன்று நடத்தப்பட்டது.

முன்மொழியப்பட்ட சீனா - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை தொடர்பான மேலதிக நடவடிக்கைகள் மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றன.

இலங்கை – தாய்லாந்து சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் நன்மைகள் பற்றிய அறிக்கைகள் தற்போது ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

அதே உடன்படிக்கையின் மீதான எதிர்கால நடவடிக்கைகள் மீளாய்வொன்றினை மேற்கொண்டதன் பின்னர் மேற்கொள்ளப்படும்.

எனவே, சர்வதேச வர்த்தக உடன்படிக்கைகள் தொடர்பான நடவடிக்கைகளுக்கு விஷேட நிதி கிரயமொன்று ஏற்படுவதில்லை. அத்துடன் தொடர்புடைய நிதி முன்னேற்றத்தினை குறிப்பிட முடியாது.

அங்கத்துவ நாடுகள் பல தரப்பாக உடன்பட்ட உண்மைகளின் அடிப்படையில் இந்த வர்த்தக ஒப்பந்தங்களின் பௌதீக முன்னேற்றம் தங்கியுள்ளது.

அங்கத்துவ நாடுகளினால் உண்மைகள் விசாரணை செய்யப்பட்ட சந்தர்ப்பங்களில் அவற்றில் உள்ள தேவையான தகவல்கள் மற்றும் பங்கேற்பு என்பன இந்த திணைக்களத்தினால் முழுமையாக வழங்கப்பட்டிருந்தது.

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | திணைக்களத்தின் பிரதான தொழிற்பாடுகளின் பிரகாரம், சுங்கத்தீர்வைகளை தள்ளுபடி செய்தல், பதிவழிப்பு செய்தல் மற்றும் சுங்கக்கட்டளை சட்டத்தின் பிரிவு 19 (அ) வின் ஏற்பாடுகளின் பிரகாரமும் நாட்டின் கொள்கைகளின் பிரகாரமும் சுங்க தீர்வை நிவாரணம் வழங்குவதுடன் தொடர்புடைய கடமைகள் என்பன திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்ட செயற்பாடுகள் தொடர்பாக 2019 ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானியில் உள்ளடக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளை பராளுமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கூட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுங்கக் கட்டளை சட்டத்தின் 19(அ) பிரிவின் கீழ் 2021 சனவரி 01 முதல் 2021.12.31 வரையிலும் பதிவழிப்பு செய்யப்பட்ட சுங்க தீர்வைகள் பற்றிய தகவல்கள் 2022.03.31 ஆம் திகதியிடப்பட்ட 2273/74 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு அனுப்பப்பட்டுள்ளன. | திட்டங்களின் பிரகாரம், பாராளுமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.2 முகாமைத்துவ பலவீனங்கள்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கைகள் திணைக்களத்தின் இணையத்தளத்தில் சேர்க்கப்பட்டு நாளது வரையாக்கல் செய்யப்படவேண்டிய போதிலும், 2020 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை அறிக்கை 2022 ஏப்ரல் 29 ஆம் திகதி வரையிலும் இணையத்தளத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கொவிட்-19 காணப்பட்ட காலப்பகுதியின் போது உத்தியோகத்தர்கள் வீட்டிலிருந்து கடமைகளை செய்ததன் காரணமாக 2020 இன் செலாற்றுகை அறிக்கையினை உள்ளீடு செய்வதனை ஒருங்கிணைக்க முடியவில்லை. இதனால் அந்த பணி காலதாமதமாகியது. பிழையினை சரிசெய்து எதிர்காலத்தில் இவ்வாறான காலதாமதத்தினை தவிர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | இணையத்தளம் நாளது வரையாக்கல் செய்யப்பட்டு பேணப்படல் வேண்டும். |

## 4 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 64 ஆகும் மற்றும் அவற்றில் 16 பதவிகள் வெற்றிடமாக காணப்படுகின்றன. அந்த வெற்றிடங்களுள் 05 சிரேஷ்ட மட்ட பதவிகளும் 06 ஆரம்ப மட்ட பதவிகளும் காணப்பட்டன. | வெற்றிடங்கள் தொடர்பில் நிதி அமைச்சு அறிந்துள்ளதுடன் மீதியாக காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. | திணைக்களத்தின் கடமைகளை பூரணப்படுத்துவதற்கு அவசியமான வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மற்றும் அவ்வாறான பதவிகள் இல்லாதவிடத்து பதவியணியினை திருத்தம் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |